## <u>சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை</u>

**<u>OS.NO.253/2014</u>** **தேதி.**07.02.2026

இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி. பிரியா என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு ............... பி.சா.3 ...................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10 வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2026 ம் ஆண்டு 30.01.2026 ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் | திருமதி.ஜெயலட்சுமியம்மாள் |
| க/பெ. | திரு.ஜெகநாத கவுண்டர் |
| வயது | 75/2026 |

துவக்க நேரம் 12.50 P.M

சாட்சி முன்னிலை உறுதிமொழி செய்துவைக்கப்பட்டார்.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–

1. நான் ஆரம்பத்திலிருந்து பூண்டி கிராமத்தில்தான் இருந்தேன் என்றால் சரிதான். தற்பொழுது எங்கு வசித்து வருகிறனே் என்றால் வாணியன் சத்திரம் கிராமத்தில் இருக்கிறேன். எனக்கு நீதிமன்றத்ததிலிருந்து அழைப்பாணை வரவில்லை என்றாலும், விநாயகம் கேட்டுக்கொண்டதால் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றாலும் சரிதான்.

2. நான், எனது கணவர் ஜெகன்நாத கவுண்டர், மாரிமுத்து மகன் பெயருமாள் ஆகிய நாங்கள் அனைவரும் சேர்ந்து கடந்த 15.05.1995 ல் வாதியின் தாயார் லஷ்மி அம்மாள் என்பவருக்கு 1466/1995 ஆவணத்தில் உள்ள சொத்தை விற்றோம் என்றால் சரிதான், அந்த சொத்தை விநாயகம் வாங்கி அவர் அம்மா மீது எழுதினார். சொத்தை, விநாயகம் வாங்கி அவர் அம்மா மீது எழுதினார் என்பதற்கு ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் தெரியாது.

3. நான் சொல்வது பொய் என்றாலும், விநாயகம் சொல்லி இந்த வழக்கில் பொய் சாட்சி சொல்கிறேன் என்றாலும், நான் நேரடியாகதான் சொத்தை லஷ்மி அம்மாளுக்கு கிரையம் கொடுத்தோம் என்றாலும் அதற்கான ஆவணம் உள்ளது என்றாலும் சரியல்ல.

4. நான், வாதி கணேசனுடன் கடந்த 09.02.1995 ல் ஒரு கிரைய உடன்படிக்கையை ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் கிரைய உடன்படிக்கையில் (வா.த.சா.ஆ.13) உள்ள கைரேகை என்னுடையதா என்றால் இல்லை, இதில் எனது கணவர் கையெழுத்து போட்டுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும், ரூ.1,91,750/– யை வாதி கணேசனிடம் பெற்றுக்கொண்டு கிரைய உடன்படிக்கை நான் ஏற்படுத்திக்கொடுத்தேன் என்றாலும் தற்பொழுது பிரதிவாதிக்கு சாதகமாகவும், இவ்வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

5. இந்த சொத்தை விற்பது சம்பந்தமாக நான், சார் பதிவாளர் அலுவலகம் போகவில்லையா என்றால் போனேன். சார் பதிவாளர் அலுவலகத்திற்கு செல்லும்பொழுது என்னுடன் எனது கணவர் மற்றும் பெருமாள் ஆகியோர் உடன் வந்தார்கள் என்றால் ஆமாம். வாதி, கணேசனிடம் பணம் பெற்றுக்கொண்டுதான் வாதியின் தாயார் லஷ்மி அம்மாள் பெயரில் கிரையம் செய்து கொடுத்தோம் என்றால் இல்லை, விநாயம்தான் பணம் கொடுத்தார்.

6. விநாயகம் எவ்வளவு பணம் கொடுத்தார் என்றால் ரூ.1,30,000/– பணம் கொடுத்தார். கடந்த 1995 ம் ஆண்டு கொடுத்த பணத்தை ஞாபகம் வைத்து இந்த 2026 ம் ஆண்டு எவ்வளவு தொகை என்று ஞாபகம் வைத்து சொல்கிறேனா என்றால் ஆமாம். எனக்கு என்ன வயதாகிறது என்றால் 75 வயதாகிறது. கிரைய பத்திரம் எழுதிக்கொடுக்கும்பொழுது வாதி கணேசனும், தாயார் லஷ்மி அம்மாளும் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்தார்களா என்றால் இல்லை.

7. கடந்த 1995 ல் பிரதிவாதி விநாயகம் என்ன வேலை செய்து வந்தார் என்றால் ஞாபகம் இல்லை. கணேசன் கண்டக்டர் வேலை செய்து வந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. எவ்வளவு ஏக்கர் கிரையம் கொடுத்தோன்

என்றால் ஏக் 3.22 நிலம் கிரையம் கொடுத்தேன். ஒரு செண்ட் ரூ.590/–க்கு விற்றிருப்போமா என்றால் இருக்கும்.

8. கடந்த 09.02.1995 தேதியிட்ட கிரைய உடன்படிக்கை பத்திரத்தில் பின்புறம் ரூ.1,64,950/– செல் வைத்துதான் உடன்படிக்கை ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் பொய் சொல்கிறனே் என்றாலும், மேற்படி தொகையை பெற்றுக்கொண்டுதான் நான் கைரேகை வைத்து உடன்படிக்கையை ஏற்படுத்திக்கொடுத்தேன் என்றால் சரியல்ல.

9. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது என்றாலும், விநாயகம் தூண்டுதலின்பேரில் நான் பொய் சாட்சியம் சொல்கிறனே் என்றாலும் சரியல்ல. வாதி கணேசனிடம் பணம் பெற்றுக்கொண்டு அவரது தாயார் லஷ்மி அம்மாள் பெயரில் சொத்தை பதிவு செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரிதான்.

10. கடந்த 09.02.1995 அன்று வாதி கணேசனிடம் பணம் பெற்றுக்கொண்டு கைரேகை வைத்து உடன்படிக்கையை ஏற்படுத்திக்கொடுத்துவிட்டு தற்பொழுது இல்லை என்று பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை :–இல்லை.

முடிவு நேரம் 1.15 P.M

Taken down before by me in open
court read over / intarpreted is the
witness and Acknowleged by
him/her to be correct.

Subordinate Judge,
Ranipet.